# வாகை சூட வழி

பத்தாம் வகுப்பு
வேலூர் மாவட்டம்



வினா - விடைத் தொகுப்பு
(வினா வரைவுத் திட்டப்படி)

**2012 - 2013**

வெளியீடு,
திரு.பொன்.குமார், க.மு.அ.மு.,அ.நி.,க.இ.,
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர் மாவட்டம்

**தமிழ்**
**வேலூர் மாவட்டம்**
**முதன்மையான வினாக்களும். விடைக்குறிப்புகளும்**

**(வினா வரைவுத் திட்டப்படி)**

2012 - 2013

**தமிழ் முதல் தாள் I**

**I. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக: -**

1. திருக்குறளைப் போற்றி பாடும் நூல் **திருவள்ளுவ மாலை.**
2. திருக்குறள் **குறள்** வெண்பாக்களால் ஆன நூலாகும்.
3. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர் **பாரதிதாசன்**
4. ஏலாதி பதினெண் **கீழ்க்கணக்கு நூல்களுள்** ஒன்று.
5. கணிமேதாவியாரின் காலம் **கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு.**
6. மருந்துப் பொருள்களால் அமையப் பெற்ற இரு நூல்கள் **திரிகடுகம், ஏலாதி**
7. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் **பாவாணர்.**
8. இன்றைய மதுரையில் **மூன்றாம் தமிழ்ச்சங்கம்** இருந்தது.
9. இளங்கோவடிகள் **சேர** நாட்டைச் சேர்ந்தவர்.
10. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் **பாரதியார்.**
11. குடும்ப விளக்கு **பாரதிதாசன்** படைப்புகளுள் ஒன்று.
12. பாரதிதாசன் **புரட்சிக் கவிஞர்** என அழைக்கப்படுகிறார்.
13. அரசின் அனைத்துத் துறைகளில் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர் **பெரியார்.**
14. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று **சொத்துரிமை** இல்லாமை.
15. கம்பராமாயணம் **ஆறு** காண்டங்களைக் கொண்ட நூல்.
16. சரசுவதி அந்தாதி **கம்பர்** இயற்றிய நூல்களுள் ஒன்று.
17. கம்பரைப் புரந்தவர் **சடையப்ப வள்ளல்.**
18. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசிரியராகப் பணியாற்றினார்.
19. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது **பாரதி ரத்னா**
20. "நல்" என்னும் அடைமொழி பெற்ற நூல் **நற்றிணை**
21. நற்றிணையைத் தொகுப்பித்தவர் **உக்கிரப் பெருவழுதி**
22. நற்றிணை **எட்டுத் தொகை** நூல்களைச் சார்ந்தது
23. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை **பேச்சுக் கலை**
24. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்வர் **பேரறிஞர் அண்ணா**
25. சேக்கிழர் பெருமான் அருளியது **பெரியபுராணம்**
26. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் **அப்பூதியடிகளார்**
27. பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய ... கவிவலவ எனப் பாடியவர் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.**
28. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் **தேவாரம்**
29. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் **மூத்த அறிவுடையார்**
30. அரியவற்றுள் எல்லாம் அரிது **பெரியார்** பேணித் தமராக கொளல்
31. முதலிலார்க்கு **ஊதியம்** இல்லை
32. திருநாவுக்கரசர் காலம் **கி.பி.7ஆம்** நூற்றாண்டு.
33. "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் பாடல் **பாரதியாரை"** அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத் தூண்டியது.
34. 'உலகம் என்னும் தமிழ்ச் சொல் **உலவு** என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.
35. தமிழர்கள் திலத்தை **ஐந்து** வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
36. சீறாப்புராணம் **மூன்று** காண்டங்களையுடையது

37. கேழல் என்பதன் பொருள் **பன்றி**
38. காந்தியடிகள் **அரிச்சந்திரன்** நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
39. பகைவனிடமும் அன்புகாட்டும் எனக் கூறிய நூல் **பைபிள்**
40. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை **எளிமை, சிக்கனம்.**
41. கலித் தொகை **எட்டுத் தொகை** நூல்களில் ஒன்று .
42. நெய்தல் கலியைப் பாடியவர் **நல்லந்துவனார்.**
43. போற்றாரைப் பொறுத்தல் என்பது **பொறை** எனப்படும்.
44. பெருமாள் திருமொழியில் 105 பாசுரங்கள் உள்ளன.
45. குலசேகராழ்வார் பாடல் **பெருமாள் திருமொழி** தொகுப்பில் உள்ளது.
46. "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றள்ள **நூல் பெரியபுராணம்.**
47. வள்ளலாரின் இயற்பெயர் **இராமலிங்கர்.**
48. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி **பன்னிரண்டாம் வகுப்பு.**
49. விரல்கள் பத்தும் மூலதானம் என்னும் பாடலின் ஆசிரியர் **தாரா பாரதி.**
50. பசிப்பிணி மருத்துவர் **வள்ளலார்.**

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் **திருவாதவூர்**
2. மாணிக்கவாசகர் பாடல்கள் **எட்டாம்** திருமுறையில் இடம் பெற்றுள்ளன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் **திருபெருந்துறையில்** உள்ளது.
4. மாணிக்க வாசகர் **அரிமர்த்தன பாண்டிய** மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.
5. ஜி.யு. போப் திருவாசகத்தை **ஆங்கில** மொழியில் மொழிபெயர்த்தார்.
6. திருவாசத்திற்கு உருகார் **ஒருவாசகத்திற்கும்** உருகார்
7. திருக்குறளில் 133 அதிகாரங்களும் 1330 குறட்பாக்களும் உள்ளன.
8. திருக்குறள் **ஆங்கிலம்** முதலான உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
9. ஒழுக்கத்தின் எய்துவர் மேண்மை இழுக்கத்தின் எய்துவர் **எய்தாப்** பழி
10. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித் தேரினும் **அ:.தே** துணை
11. ஊக்கம் உடையான் **ஒடுக்கம்** பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து.
12. தமிழர் மனித வாழ்வை **அகம், புறம்** எனப்பிரித்தனர்
13. குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி **தமிழ்.**
14. 2004 ஆம் ஆண்டு **அக்டோபர்** திங்களில் தமிழ் மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
15. தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் **மாக்சு முல்லம்** ஆவார்.
16. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் **மணிமேகலையும்** ஆகும்.
17. சிலப்பதிகாரம் மணிமேகலை சீவகசிந்தாமணி வளையாபதி **குண்டல கேசி** என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.
18. தமிழ்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உள்ளது.
19. பெரியார் சமூக **முரண்களை** எதிர்த்தவர்.
20. நற்றினை ஒன்பதடிச் சிற்றெல்லயும் **பன்னிரண்டு** பேரெல்லையும் கொண்ட நூல்
21. 'அரி' என்னும் சொல்லின் பொருள் **நெற்கதிர்**
22. வெறும் பேச்சுக்கும் **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
23. பேச்சு முடிவில் **சுருக்கத்தை** கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.
24. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பர்
25. படப்பிடிப்புக் கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.
26. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு **வேடிக்கையாக** இருக்கும்.
27. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் **அதிவீரராம பாண்டியன்.**
28. நால்வகைப் பாக்களும் வயலுக்கு **வரப்புகளாக** அமைந்துள்ளன.

29. இலெமூரியாவை **மனித** நாகரிகத் தொட்டில் என்பர்.
30. தனக்குவமையில்லா ஒரு **தனி** தமிழ் இனம்.
31. இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்.
32. அறனீனும் இன்பமும் ஈனும் **திறனறிந்து** தீதின்றி வந்த பொருள்.
33. திருநாவுக்கரசரின் தமக்கையார் **திலகவதியார்** ஆவார்.
34. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் **தேவாரம்** என வழங்கப்படுகிறது.
35. சீறாப்புராணத்தை இயற்றியவர் **உமறுப்புலவர்.**
36. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் **சீதக்காதி.**
37. காந்தியடிகள் **அரிச்சந்திரன்** என்னும் நாடக நூலைப் படித்தார்.
38. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்.**
39. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் **குடி** போன்றிருந்தேன்.
40. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **பெருமாள் திருமொழி** குலசேகரர் பாடியதாகும்.
41. கலம்பகம் **தொண்ணூற்றாறு** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
42. பணை என்னும் சொல்லின் பொருள் **மூங்கில்.**
43. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் **வடலூர்.**
44. இராமலிங்கர் தமிழ் மொழியே **இறவாத நிலை** தரும் என்று கருதினார்.
45. சங்க காலத்தில் பெண்கள் **கடல்** கடந்து செல்லக் கூடாது
46. நாள்தோறும் கல்வியில் **புதுப்புதுத்** துறைகள் உண்டாகிக்கொண்டிருக்கின்றன.
47. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் **எழுத்துத்** தேர்வும் உண்டு.
48. நெய்தல்கலியைப் பாடியவர் **நல்லந்துவனார்.**
49. சட்டமாமேதை என அழைக்கப்படுபவர் **டாக்டர்.அம்பேத்கர்.**
50. கம்பரைப் புரந்தவர் **சடையப்ப வள்ளல்.**

**III பொருத்துக :**

1. விரை - மணம்
2. கழல் - அணிகலன்
3. ததும்பி - பெருகி
4. மெய் - உடல்
5. புகார்காண்டம் - 10 காதைகள்
6. மதுரைக் காண்டம் - 13 காதைகள்
7. வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்
8. இடர் - துன்பம்
9. நாவாய் - படகு
10. இறை - தலைவன்
11. இந்து - நிலவு
12. செறு - வயல்
13. வித்து - விதை
14. யாணர் - புதுவருவாய்
15. வட்டி - பனையோலைப்பெட்டி
16. மேதி - எருமை
17. சந்தம் - அழகு
18. கோதில் - குற்றமில்லாத
19. அங்கணர் - சிவன்
20. ஈஸ்ட்மன் - படச்சுருள்
21. எடிசன் - ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
22. எட்வர்டு மைபிரிட்சு - இயக்கப்படம்
23. வால்ட் டிஸ்னி - கருத்துப்படம்.
24. கான் - காடு
25. உழுவை - புலி
26. மடங்கல் - சிங்கம்
27. எண்கு - கரடி
28. சத்திய சோனை - காந்தியடிகள்
29. பகவத்கீதை - இந்து சமய நூல்
30. திருக்குறள் - திருவள்ளுவர்
31. பைபிள் - கிறித்துவ சமய நூல்
32. வினையே ஆடவர்க்குயிர் - குறுந்தொகை
33. முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை – தொல்காப்பியர்

34. உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே – திருமூலர்
35. விரல்கள் பத்தும் மூலதனம் - தாராபாரதி

**IV. ஏற்ற வினா அமைக்க:-**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும என்று விரும்பியவர் பெரியார்.
   **பெரியார் எதனை விரும்பினார் ?**
2. பெரியார் பெண்ணுரிமைக்கும் ஊறு வினைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
   **பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்?**
3. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.
   **எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்?**
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளிஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
   **திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது ?**
5. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
   **எது கடினமான பணியாகும் ?**
6. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி. இராமசந்திரன் கருதினார்.
   **எதை தம் இருகண்களாக எம்.ஜி. இராமசந்திரன் கருதினார்?**
7. தமிழர்கள் அரவு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
   **தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?**
8. காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
   **காந்தியடிகள் கதரை எவ்வாறு கருதினார்?**
9. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.
   **கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்?**
10. இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள் இளங்கலைக் கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
    **எத்தகுதியுடையோர் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்?**
11. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
    **யாருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன?**
12. இராமலிங்கர் இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டப்பட்டார்.
    **இராமலிங்கர் எப்படி பாராட்டப்பட்டார்?**

## இரண்டு மதிப்பெண் வினா (செய்யுள்)

1. **உயிரினும் ஓம்பப்படுவது? எது? ஏன்?**
   - உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.
   - ஏனென்றால் ஒழுக்கம் ஒருவருக்கு அனைத்துச் சிறப்புகளையும் தருகிறது.
2. **ஒழுக்கத்தால் எய்துவது எது? இழுக்கத்தால் எய்துவது எது?**
   - ஒழுக்கத்தால் எய்துவது மேன்மை
   - இழுக்கத்தால் எய்துவது அடையக் கூடாத பழி.
3. **நன்றிக்கு வித்தாவது எது?**
   நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்.
4. **என்றும் இடும்பைத் தருவது எது?**
   என்றும் இடும்பைத் தருவது தீய ஒழுக்கம்
5. **காலம் கருதினும் கைகூடும். எப்போது?**
   காலம் அறிந்து இடத்தோடு பொருந்தி செயல்படுதல் வேண்டும். அவ்வாறு செய்தால் உலகத்தை அடைய விரும்பினும் கைகூடும்.
6. **ஊக்கம் உடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?**
   ஊக்கம் உடையவனின் ஒடுக்கம், ஆட்டுக்கடா பகையைத் தாக்கவதற்கும்பின்வாங்கும் தன்மையைப் போன்றதாகும்.

7. **செயற்கரிய செயல் செய்வது எப்போது?**
வாய்ப்புக் கிடைத்தபொழுது, அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்
8. **திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**
1. முதற்பாவலர், 2. தெய்வப்புலவர், 3. தேவர், 4. பொய்யில் புலவர்
9. **பழியில்லா மன்னாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியர் குறிப்பிடுவன யாவை?**
   - பிறர்க்குப் பணிதல், நல்வழியில் நடத்தல், சான்றோர்களின் அறிவுரையைப் பின்பற்றுதல்.
   - நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும், அவை கூறும் வண்ணம் வாழுதலே பழியில்லா மன்னனின் பண்புகளாகும்.
10. **குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?**
   - இராமனைக் கண்களால் கண்டு மகிழ்ந்த குகன்; இருள் போன்ற நீண்ட தலைமுடி மண்ணில் விழும்படி வீழ்ந்து வணங்கினான்.
   - பின் எழுந்து வாயைக் கையால் பொத்தி உடலை வளைத்து அடக்கமாக நின்றான்.
11. **குகனின் வேண்டுகோள் யாது?**
   - உலகிற்கு செல்வம் போன்றவனே! தவக்கோலத்தில் தங்களைப் பார்த்த என் கண்களை எடுக்க இயலாத நிலையில் உள்ள கள்வன் நான்.
   - இம்மனத்துயரோடு என் இருப்பிடம் செல்லேன், ஐயனே! தங்களுக்கு அடிமையாய் இருந்து தொண்டு செய்ய அனுமதிக்குமாறு இராமனிடம் குகன் வேண்டினான்.
12. **“அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்” யார் யாரிடம் கூறியது?**
இராமபிரான், குகனிடம் கூறியது.
13. **அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?**
   - காமம், சினம், களவு, பொய் ஆகிய குற்றங்கள் நீங்கியவர்
   - சிறந்த சிவபக்தர், நாவுக்கசரிடம் பேரன்புமிக்கவர் .
14. **மூத்த திருநாவுக்கரசருக்கு நேர்ந்ததென்ன?**
மூத்த திருநாவுக்கரசர் வாழையின் இளங்குருத்தை அரியும் போது பாம்பு தீண்டியதால் உயிர் துறக்க நேர்ந்தது.
15. **“இப்போது இங்கு அவன் உதவான்” – யார் யாரிடம் கூறியது?**
அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடம் கூறியது.
16. **வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை?**
   - நால்வகைப் பாக்களே வயலின் வரப்புகளாகும்.
   - அவை வெண்பா, ஆசிரியர்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலியவைகளாகும்.
17. **வயல் தரும் விளைவுகள் யாவை?**
   - அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன வயல் தரும் விளைவுகளாகும்.
18. **போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?**
   - தலையில் குட்டுபவர் அதிவீரராம பாண்டியன்
   - செவியை அறுப்பவர் வில்லிபுத்தூரார்
   - தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்.
19. **கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?**
குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் துணையில்லாத அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் இன்றி தானே கெட்டழிவான்.
20. **நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து?**
நல்லார் தொடர்பு கைவிடல் என்பது பலரைப் பகைத்துக் கொள்வதைவிட பன்மடங்கு தீமை உடையதாகும்.
21. **பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?**
ஒரு பொருட்டாக மதிக்காதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வதில் பொருளுக்கு இணையானது வேறில்லை.
22. **வேந்தர்க்குரிய பொருள்கள் எவை?**

- அரசுரிமையில் வந்த பொருளும், மக்கள் வரியாகதரும் பொருளும், பகைவரை வென்று கொண்ட திரைப் பொருளும் அரசனுக்கு உரிய பொருள்களாம்.

**23. சிவ பெருமான் எத்தன்மையினன் என நாவுக்கரசர் கூறுகிறார்?**
- யாருக்கும் ஆட்படாதத் தன்மை உடையவர்.
- அழகிய வெண்மையான சங்கினை காதில் குழையாகக் கொண்டவா என்று நாவுக்கரசர் கூறுகிறார்.

**24. ஆற்றுதல் என்பது யாது?**
ஆற்றுதல் என்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல்.

**25. பண்பு எனப்படுவது யாது?**
பண்பு எனப்படுவது சான்றோர் வழி அறிந்து நடத்தல்

**26. அறிவு எனப்படுவது யாது?**
அறிவு எனப்படுவது அறிவற்றவர்கள் கூறும் சொற்களைப் பொறுத்தல்.

**27. கலம்பக உறுப்புகள் நான்களை எழுதுக.**
அம்மானை, ஊசல், தூது வண்டு குறம், மறம்.

**28. நந்திக் கலம்பகம் யார்மீது பாடப் பெற்றது?**
நந்திவர் மன் மீதுப் பாடப்பெற்றது.

**29. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?**
நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமாகும்.

**30. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழந்துள்ளார்?**
'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்று பாரதிதாசன் திருவள்ளுவரைப் புகழ்ந்துள்ளார்.

<u>இரண்டு மதிப்பெண் வினா (உரைநடை)</u>

**1. தமிழ்மொழி குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?**
மனித உணர்வுகளை (எண்ணிய எண்ணிய படி எண்ணியாங்கு) உணர்த்தவல்ல மொழி தமிழ் மொழி என மொழியியல் மேதை முனைவர் எமினோ கூறுகிறார்.

**2. தமிழ் மொழியின் தனித் தன்மைகளை எழுதுக?**
- இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
- அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தது
- பழமையும் பெருமையும் வாய்ந்தது
- இறவாத இலக்கிய, இலக்கண வளங்களைக் கொண்டது

**3. ஒரு மொழி நிலைப் பெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?**
- பேச்சு மொழியாக
- எழுத்து மொழியாக
- ஆட்சி மொழியாக
- நீதிமன்ற மொழியாக
- பயிற்று மொழியாக
- இலக்கிய வளமிக்கதாக
- காலத்திற்கேற்ப புதுமை பெற்றதாக இருப்பதே தகுதிபாடுகள் ஆகும்

**4. மொழி மாற்றம் என்றால் என்ன?**
ஒரு மொழிப்படத்தை மற்ற மொழிகளில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழி மாற்றம் என்று பெயர்.

**5. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?**
- பல்வகை விலங்குகளின் வாழ்க்கை
- பன்னாட்டு மக்களின் வாழ்க்கை

**6. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகள் யாவை?**
- குமரிமலை
- ப∴றுளி ஆறு.

**7. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?**

- பட்டினப் பாவை
- மதுரைக் காஞ்சி

8. **ஞாலம் - பெயர்க்காரணம் கூறுக.**
    - ஞாலம் என்னும் தமிழ்ச்சொல் 'ஞால்' என்னும் சொல்லடியாகத் தோன்றியது.
    - ஞால் என்பதற்குத் தொங்குதல் என்பது பொருள்
    - எவ்வித பற்றுக் கோடுமின்றி அண்டவெளியில் உலகம் தொங்கிக் கொண்டிருக்கிறது என்பதே ஞாலம் என்பதன் பொருளாகும்.
9. **நோய் வருவதற்கான காரணம் பற்றி திருவள்ளுவர் கூறுவது என்ன?**
    - உடலில் வாதம், பித்தம், சீதம் ஆகிய மூன்றும் சமநிலையில் இருக்க வேண்டும்.
    - அச்சமநிலை தவறும் போது நோய் மிகும் என திருவள்ளுவர் கூறுகிறார்.
10. **மருந்தில்லா மருத்துவம் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?**
    - நாம் முன்பு உண்ட உணவு நன்கு செரித்திருக்கிறதா என்று உணர்ந்தறிய வேண்டும்.
    - பின்னர் பசியை உணர்ந்து, அளவுடன் உணவை உண்ண வேண்டும்.
11. **காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?**
    - தாகத்திற்கு நீர்தருதல்
    - தீமை செய்தவருக்கும் நன்மை செய்தல்.
12. **இயேசுவின் மலைப் பொழிவு நூலைப் படித்துக் காந்தியடிகள் எதை உணர்ந்தார்?**
    - தீயவனை எதிர்க்காதே, அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில்!
    - பகைவனிடத்தும் அன்பு பாராட்டு
13. **காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?**
    - கதர் இயக்கம்
    - மதுவிலக்கு
    - தீண்டாமை ஒழிப்பு
14. **காந்தியடிகள் எதனைப் பாவம் என்றார்?**
    - "பகட்டான வாழக்கையையே பாவம்"
15. **எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் ?**
    - ஈகை, எளிமை, இன்சொல், சிக்கனம்.
16. **இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது/**

    இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக் கணக்கான கிராமங்களின் வாழ்வு தான் அந்தக் கிராமங்களின் வாழ்வு, அந்த நாட்டின் உழவர்கள் மற்றும் இளைஞர்கள் கைகளில் தான் உள்ளது என்றார்.
17. **வள்ளலாரின் முழக்கம் யாது?**
    - அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை
18. **சத்திய தருமசாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?**

    சாதி, மத வேறுபாடு இன்றிப் பசித்தோர்க்கு எல்லாம் உணவிட்டார். வள்ளலார் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.
19. **தற்போது வளர்ந்துவரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை?**
    - உயிரி – தொழில் நுட்பத் துறை
    - நுண்ணியல் தொழில் நுட்பத் துறை
20. **இளங்கலைப் படிப்புகள் நான்கு எழுதுக?**
    - பி.லிட்., பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்.,

## <u>நான்கு மதிப்பெண் சிறு வினாக்கள் (செய்யுள்)</u>

1. **சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?**
    - புறாவின் துன்பத்தைப் போக்க தன் தசையையே அரிந்து கொடுத்தவன் சிபி என்ற மன்னன்.

- அரண்மனையின் மணியோசைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து தன் ஒரே! மகனை தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்று நீதிவழங்கிய மனுநீதிச் சோழன் என்னும் மன்னன்.
- இத்தகைய பெரும்புகழ் பெற்ற மன்னர்கள் வாழ்ந்த புகார் நகரமே நான் பிறந்த ஊர் ஆகும்.

**2. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?**

- கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோல் அன்று, அதுவே அரசநீதி என்றான் பாண்டிய மன்னன்.
- அறநெறி தவறிய அரசனே! என் கால்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது என்றாள் கண்ணகி.
- நீ கூறியது நல்லதே! என்னுடைய சிலம்பு முத்துப் பரல்களைக் கொண்டது என்றான் பாண்டிய மன்னன்.

**3. கம்பராமாயணம் சிறு குறிப்பு எழுதுக: -**

- இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.
- வான்மகி வடமொழியில் எழுதியதைத் தழுவிக் கம்பர் தமிழில் இயற்றினார்.
- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார். இது காலப் போக்கில் கம்பராமாயணம் எனப்பட்டது.
- கம்பராமாயணம் பால காண்டம், முதல் யுத்த காண்டம் வரை என ஆறு காண்டங்களை உடையது.
- காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றுள்ளது.
- பத்தாயிரம் பாடல்களைக் கொண்ட இந்நூல் தமிழக் கவிதைக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் சான்றாகத் திகழ்கிறது.

**4. சீதை இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன?**

- "இவன் நம்மிடத்து நீங்காத அன்பு உடையவன்"
- எல்லாவற்றினும் இனிய நண்பன்
- என் உயிர் போன்றவன்
- இவன் எம்மோடு இருக்கட்டும் என்று சீதை இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறினான்.

**5. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?**

- பொன், முத்து, பவளம், மணி ஆகியன சான்றோர் நட்புக்கு கூறபடும் உவமைகளாகும்.
- வெவ்வேறு இடங்களில் இவை தோன்றினாலும் அழகிய மாலைகளாகத் தொடுக்கும் போது இதன் மதிப்பு உயரும்.
- அதுபோல கோப்பெருந்சோழனும் பிசிராந்தையாரும சான்றோர்கள் பக்கமே இருப்பர்.
- சான்றாண்மை இல்லாதவர்கள் தீயவர் பக்கம் சேர்வர்.

**6. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப் புலவர் கூறுவன யாவை?**

- புலியானது சிங்கக் கூட்டங்களைத் தவிர மற்ற விலங்குகளைக் கொன்று தின்னும்.
- பெரிய பனை போன்ற தும்பிக்கை உடைய யானைகளின் மார்பினைக் கீறி குருதியினைக் குடித்து உறங்காமல் நிற்கும்.
- இடியோசைக் காட்டிலும் அதிகமாக முழங்கும்.
- அவ்வோசை பெரிய மலைகளும் அதிரும் படியாக இருக்கும்.

**7. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.**

- கூர்மையான நகத்தையும் திண்ணிய வலிமையும் உடைய புலி தன் வாலை வளைத்தது.
- தன் உடல் நடுக்கமுற்று மெல்ல மெல்ல நடந்து வந்தது.
- குளிர்ச்சி பொருந்திய நபிகள் நாயத்தின் திருமுகத்தைக் கண்டு, திருவடிகளைப் பணிந்து வணங்கியது.

**8. சாதனைப் பூக்கள் என்று எவற்றை இளந்திரையார் சுட்டுகிறார்?**

- செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வு எடுப்பதில்லை.
- செடியின் வெற்றி பூவில் உள்ளது
- அதுபோல நம்முடைய வெற்றி உழைப்பில் உள்ளது.

- நம்முடைய வெற்றிகளால் துன்பங்கள் ஓடிவிடும். இதனையே சாதனைப் பூக்கள் ன்று இளந்திரையின் குறிப்பிடுகிறார்.

**நான்கு மதிப்பெண் சிறு வினாக்கள் (உரைநடை)**

**1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**
- பெண்கள் மனிதர்களாக மாற முதலில் அடுப்பறையை விட்டு வெளியேறி நாட்டு நடப்புகளை அறிய வேண்டும்
- பெண்கல்வி உரிமை மட்டுமல்ல சமூக மாற்றத்தின் தேவை என்பதை உணர வேண்டும்
- பெண்கள் கல்வி கற்றால் தான் சமூக மாற்றம் ஏற்படும் என்பதனை நம்ப வேண்டும்
- பெண்கள் உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் பெற வேண்டும்
- பகுத்தறிவற்றவர்களாய் இராமல் பெண்களுக்கான இழிநிலை ஒழிக்கப்பட வேண்டும் என்றார் பெரியார்.

**2. பெண்ணுரிமையை விளக்குக?**
- ஆணுக்கு பெண் இளைப்பில்லை
- ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்
- பெண்கள் அடிகளாய் இராமன் சமுதாயத்திற்கு தொண்டாற்றுபவர்களாகத் திகழ வேண்டும்
- பெண்கள் சொத்துரிமை பெற போராட வேண்டும்
- பெண்கள் புத்துலகு படைக்க வேண்டும்

**3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**
- தமிழரிடம் பரவியுள்ள பெருநோய் மணக்கொடை
- தனது மகனின் கல்விக்கும் பணம் செலவழிக்கும் பெற்றோர் அவ்முதலீட்டை வரும் மனைவியிடம் மணக்கொடையாகப் பெற்றவிடத் துடிக்கிறார்கள்
- அன்பு, தியாகம், ஒழுக்கம் போன்ற உணர்ச்சிகள் ஏற்பட்டால் இத்தீமையை ஒழிக்க முடியும் என்று பெரியார் கூறுகிறார்.

**4. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?**
- அறியாமை தான் அனைத்திற்கும் மூல காரணம் என்பதை அறிந்த அம்பேத்கர் 1946 இல் மும்பையில் மக்கள் கல்விக் கழகத்தை நிறுவனார்.
- மும்பையில் அம்பேத்கர் சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தை உருவாக்கினார்
- குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு மூலகாரணமாக இருந்து கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

**5. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**
- பேச்சின் தொடக்கம் நன்றாக இருக்க வேண்டும்.
- அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேச்சைத் தொடங்க வேண்டும்
- தங்குத்தடையின்றிப் பேசும் தொடக்கமே அடித்தளமாகும்.
- கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்க வேண்டும்
- அவையோரின் உள்ளங்களை கவருவதாக இருக்க வேண்டும்
- இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தொடக்கவுரை அமைதல் நன்று

**6. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக? சுருக்கமான விளக்கம்**
- பேச்சாளர் பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடிக்க வேண்டும்
- கேட்போர் மனதில் பதியுமாறு சுருக்கி முடிக்க வேண்டும்
- உணர்ச்சியைத் தூண்டி முடித்தல் வேண்டும்
- தனிச்சிறப்பும் பெருமையும் அமையும் வகையில்
- பாராட்டி முடித்தல் நலம்
- பொருத்தமான கவிதை கூறி முடிக்க வேண்டும்

**7. பண்டைத் தமிழரின் கடல் வாணிகம் குறித்து தொகுத்துரைக்க?**
- பண்டைத் தமிழர்கள் கப்பல் மூலமாக பக்கத்து நாடுகளுடன் வாணிகம் செய்து வந்தனர்
- கிழக்கிந்தியத் தீவுகளைச சார்ந்த நாடுகளுடன்

- பொன்னும் மணியும் முத்தும் துகிலும் கொண்டு கடல் வாணிகம் செய்தனர்
- கி.மு. பத்தாம் நூற்றாண்டில் சாலமன் அரசனுக்கு மயில் தோகையும் யானைத் தந்தமும், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் பாபிலோனியாவுக்கும் அரிசியும், மயிலும், சந்தனம், தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்டன.
- சீனாவிலிருந்து சர்க்கரையும், பட்டும் இறக்குமதியாயின.

**8. உழவுத் தொழில் குறித்து எழுதுக?**

- பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்
- உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்கிறது குறள்
- தமிழ்ர், உழுது பயிர் செய்து உலகைக் காப்பவராகப் போற்றினர்
- 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனும் மணிமேகலை அறம் இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது
- உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது
- மருதநிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

**9. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக?**

**அரிச்சந்திர நாடகம் : -**

- அரிச்சந்திர நாடகமே காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம்
- வாழ்வில் பொய்யோ பேசாத மன்னன் அரிச்சந்திரன் அவனை எப்படியாவது பொய் பேசவைத்து விடுவேன் என பல்வேறு இன்னல்களைத் தந்தார் விசவாமித்திர முனிவர்
- அரிச்சந்திரன் நாடு, மனைவி, மகன் அனைத்தையும் இழந்து, சுடுகாட்டில் வெட்டியானாகப் பணி செய்கின்றான்.
- அந்நிலையிலும் "ஒரு பொய் சொல்" இழந்த அரச வாழ்வைத் தருகிறேன் என்கிறான் முனிவன்
- உடைந்த ஒடு, கண்ணாடித் துண்டு, உடம்பின் தோல் ஆகியன கூட பயன்படும் ஆனால் இறந்த பின் உடல்கூட பயனற்றது என்று கூறி உயிர் விட்டார் அரிச்சந்திரன்
- இக்கதையே காந்தியடிகளைக் கவந்ததாகும்

**10. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?**

- மனிதராக, மனிதருக்காக வாழ்ந்து மகாத்மாவாக உயர்ந்தவர் காந்தியடிகள்
- என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் முன்றுதான் நான் ஒரு தேசபக்தன் அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும் அதற்குமேல் மனிதாபிமானியாக இருப்பதாலுமே நான் தேசபக்தன் என்றார் காந்தியடிகள்
- ஒருவன் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதைக் காட்டிலும் மனிதத் தன்மையில் பிறருக்கு உணர்த்தப் பெறுவதே சிறப்பு
- நாம் எந்த மொழியினராகவும் எந்த நாட்டினராகவும் இருப்பதே பெருமைக்குரியது என்று எண்ண வேண்டும்

**11. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது**

**சிறையின் அடைப்பு**

தென் ஆப்பிரிக்காவில் இந்தியருக்கு எதிரான கறுப்புச சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தியதால் ஸ்மட்ஸ் என்றும் ஆளுநரால் சிறையில் அடைக்கப்பட்டார்.

**செருப்பு அன்பளிப்பு**

சிறையில் காந்தியடிகள் செருப்புத் தைத்தார். அதனை சிறையிலிருந்து விடுதலையானதும் தன்னைச் சிறையில் அடைத்த ஸ்மட்ஸ்சுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இன்னா செய்தார்க்கும் இனிய செய்ய வேண்டும் என்ற அகிம்சை கொள்கையை ஆளுநருக்கு உணர்த்தினார் அண்ணல் காந்தியடிகள்.

**பாடல் வரி – வினா விடைகள்**

1. தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியே முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

<u>வினா : -</u>

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
**இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் : தமிழ்விடு தூது.**
2. "முத்தமிழ்" – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
**முத்தமிழ் - இயல், இசை, நாடகம்**
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைகளை எடுத்தெழுதுக?

| | |
|---|---|
| **தித்திக்குந்** | **உண்ணப்** |
| **முத்தி** | **விண்ணப்பம்** |

4. உவந்துரைக்கும் - பிரித்தெழுதுக?
**உவந்துரைக்கும் = உவந்து + உரைக்கும்.**
5. விளம்பக்கேள் - பொருள் கூறுக.
**விளம்பக்கேள் - விண்ணப்பம் ஒன்றைக் கேட்பாயாக!**

2. அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே – விரிவார்
திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள்படைப் போக்கா.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
**இந்நூல் இடம்பெற்றுள்ள நூல்: தமிழ்விடு தூது.**
2. அரியாசனம் - பிரித்து எழுதுக.
**அரியாசனம் = அரி + ஆசனம்.**
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகளை எடுத்தெழுதுக?

| | |
|---|---|
| **அரியாசனம்** | **திகழ்பா** |
| **சரியாரும்** | **புகழ்பா** |

4. தமிழ் வயலின் வரப்புகளாகக் கூறப்படும் பாக்கள் எவை?
**வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களே தமிழ்வயலின் வரப்புகள் ஆகும்.**
5. தமிழ் வயலின் மடைகள் எவை?
**தாழிசை, துறை, விருத்தம் முதலிய பாவினங்கள் தமிழ் வயலின் மடைகள் ஆகும்.**

<u>உரைநடை வினாவிடைகள் : -</u>

1. தமிழ் மொழியில் அறிவியல் சிந்தனைகள்

**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். உடலை ஓம்பவேண்டியதன் இன்றியமையாமையைத் தமிழர் அறிந்திருந்தனர்.**

திருவள்ளுவர்,' மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே காரணமாகும். அவற்றின் சமநிலை தவறும் போது நோய் மிகும். அவற்றைச் சமப்படுத்த இயற்கை தரும் காய்கனிகளில் இருந்தே மருந்து கண்டு உண்டனர். 'மருந்தாகித் தப்பா மரத்தாற்றால்' என்னும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும். பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.

1. உடல், உயிரைப்பற்றிய திருமூலரின் பாடல் வரி யாது?
**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்.**
2. 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தைத் தம் நூலில் படைத்தவர் யார்?
**திருவள்ளுவர்**
3. எவ்வெவ்வற்றின் சமநிலை தவறும்போது நோய்மிகம்?

**வாதம், பித்தம், சீதம்**

4. தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும் திருக்குறள் வரி யாது?
   **மருந்தாகித் தப்பா மரத்தாற்றல்.**
5. பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் எது?
   **சித்த மருத்துவம்.**

**<u>2.திருவருட் பிரகாச வள்ளலார்</u>**

சங்க காலத்தில் ஒரு முல்லைக்கொடியின் துயர் நீக்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரி வள்ளலைப்போல வள்ளலார். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர் வாடத் தாம் வாடினார். வீடு தோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே, வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு, அவர்ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.

1. முல்லைக்கொடி பற்றவதற்குத் தேரைத் தந்த வள்ளல் யார்?
   **பாரி வள்ளல்.**
2. வள்ளலாரின் பயிர்நேயம் குறித்த பாடல்வரி யாது?
   **வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்.**
3. வருத்தத்தால் உயிர் இளைத்தவர் யார்?
   **வள்ளலார்.**
4. வள்ளலார் நிறுவிய அமைப்பின் பெயர் என்ன?
   **சத்திய தருமச்சாலை (வடலூர்)**
5. வள்ளலார் யாருக்கெல்லாம் உணவிட்டார்?
   **சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.**

****** குறிப்பு : - செய்யுள், உரைநடை பகுதிகளில் கூடுதல் பயிற்சி செய்க.**

<u>8 மதிப்பெண் வினா – விடை (செய்யுள்)</u>

**<u>1. ஒழுக்கமுடைமைபற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.</u>**

**<u>ஒழுக்கமுடைமை : -</u>**

- ❖ ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பைக் கொடுக்கும் எனவே, ஒழுக்கத்தை உயிரினும் மேலாய்க் காக்க வேண்டும்.
- ❖ ஒழுக்கம் உடையவர் உயர் குடிப்பிறந்தவராகவும் ஒழுக்கம் தவறியவர் தாழ்ந்த குடியில் பிறந்தவராகவும் கருதப்படுவர்.
- ❖ ஒருவர் கற்ற வேதத்தினை மறந்துவிட்டால் அதனை மீண்டும் கற்றுக்கொள்ள இயலும். ஆனால் ஒழுக்கம் தவறினால் மீண்டும் ஒழுக்கம் தவறினால் மீண்டும் ஒழுக்கமுடையவர் எனப்போற்றப்படுவது மிகக்கடினம்.
- ❖ கற்ற கல்வியினும் ஒழுக்கமே மேலானது.
- ❖ ஒழுக்கம் கெட்டவனிடத்தில் பெருமை நிற்காது.
- ❖ மனவலிமைவுடையவர் ஒழுக்கத்தினின்றும் சிறிதும் தளர்ச்சி அடையார்.
- ❖ நல்லொழுக்கத்தாலே எல்லோரும் உயர்வு அடைவர். ஒழுக்கம் தவறியவர் பெரும்பழியை அடைவர்.

**<u>2. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக:-</u>**

**<u>காலமறிதல் -</u>**

- ❖ தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை பகலில் வென்றுவிடும். அது போலத் தன்னிலும் வலிய பகைவரைக் காலமறிந்து வெல்லுதல் வேண்டும்.
- ❖ காலம் அறிந்து செயல்பட்டால் செல்வம் நம்மைவிட்டு நீங்காமல் நிலைத்து நிற்கும்.
- ❖ ஒருவர் தக்க காலமும் இடமும் அறிந்து செயல்படவேண்டும். அவ்வாறு செய்தால், அவர் இவ்வுலகத்தையே ஆளக் கருதினாலும் அது கைகூடும்.
- ❖ ஊக்கமுடையவர் தக்க காலத்தினை எதிர்பார்த்திருப்பர். அது ஆட்டுக் கடா தன் பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்குவது போன்றதாகும்.

- ❖ அறிவுடையோர் தம் பகைவரை வெல்வதற்கு ஏற்ற காலம் வரும்வரை அவரை கௌரவிப்பர்.
- ❖ ஏற்ற காலம் வாய்த்தும் அவரை அழிப்பர்.
- ❖ ஏற்ற காலம் வரும்போது அப்போதே அரிய செயல்களைச் செய்து முடித்திட வேண்டும்.
- ❖ கொக்கு இரையை எதிர்பார்த்து காத்திருந்து, தக்க இரையினைக் கண்டவுடன் விரைந்து செயல்படும். அது போல தக்க காலம் வாய்க்கும் போது விரைந்து செயல்பட்டுச் செயலை முடிக்க வேண்டும்.

**<u>3. குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.</u>**

- ❖ தம்மைக் காண வந்த குகனை நோக்கி இராமபிரான், இங்கு அமர்க எனக் கூறினார்.
- ❖ குகன் தேனையும் மீனையும் உண்பதற்கு ஏற்ற வகையில் பக்குவம் செய்து கொண்டு வந்நுள்ளதாக கூறினான்.
- ❖ உள்ளத்தில் உள்ள அன்புனர்ச்சி புலப்படும்படி கொண்டுவந்த பொருள்கள் எளியனவாயினும் தேவாமுதத்தைக் காட்டிலும் சிறந்தனவாம். இவை தாழ்ந்தனவாயினும் அன்பு கலந்தனவாதலால் தூயனவே, எம் போன்றவர் ஏற்றுக் கொள்ளுதற்கு உரியனவே. நாம் ஏற்றுக் கொண்டதே உண்டதற்குச் சமமாகும் என இராமர் பதிலுரைத்தார்.
- ❖ மேலும் குகனை சென்று விடியற்காலை படகுடன் வந்து சேரும்படிக் கூறினார்.
- ❖ ஆனால் குகன் தானும் இராமபிரானுடன் தங்கி பணிவிடை செய்ய விரும்புவதாகக் கூறினான்.
- ❖ இராமபிரான் அவனை அனுமதித்தார்
- ❖ மறுநாள் காலை படகை விரைந்து செலுத்தி மறுகரையை அடைந்தவுடன் குகன் தானும் உடன் வருவதாகக் கூறினான்.
- ❖ இதுவரை உடன்பிறந்தவர்களாக இருந்த நால்வர் இனி உன்னோடு சேர்த்து ஐவர் ஆனோம் என இராமர் கூறினார்.

**4. பெரியாரைத்துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**
**பெரியாரைத் துணையாகக் கொள்ளல் : -**

- ❖ தம்மினும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய்க் கொண்டு அவர் வழியில் நடத்தல் வேண்டும்.
- ❖ அது வலிமைகளில் எல்லாம் சிறந்த வலிமை ஆகும்.
- ❖ அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடப்பவர்கள் வல்லவர்கள்.
- ❖ அவர்களுக்கு பகைவர் செய்யக்கூடிய தீங்கு எதுவும் இல்லை.
- ❖ கடிந்து அறிவுரை கூறும் பெரியோரைத் தமக்குத் துணையாய்க் கொள்ள வேண்டும்.
- ❖ அப்படிக் கொள்ளாதவர் தனக்கு பகைவரே இல்லை எனினும் கெடுவர்.
- ❖ நல்லவர் ஒருவர் தொடர்பினைக் கைவிடுதல், பலரின் பகைமையைத் தேடிக்கொள்வதைக் காட்டிலும் பத்து மடங்கு தீமையை தேடிக் கொள்வதற்குச் சமம் ஆகும்.
- ❖ எனவே, பெரியாரைத் துணை கொள்ளல் அவசியம்.

<u>8 மதிப்பெண் வினா – விடை (உரைநடை)</u>

**1. தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக:-**

- ❖ உலகம தன்னையும் ஞாயிற்றையும் சுற்றி வருகிறது என்பதை தெரிந்திருந்ததால் சுற்றுதல் என்ற பொருளுடைய உலவு என்னும் சொல்லிலிருந்து உலகம் என்று பெயரிட்டனர்.
- ❖ உலகம் எந்தவிதப் பற்றுக் கோடுமின்றி அண்ட வெளியில் தொங்கிக்கொண்டிருப்பதால் தொங்குதல் என்ற பொருளுடைய ஞால் சொல்லிலிருந்து ஞாலம் என்று பெயரிட்டனர்.
- ❖ ஐவகை மணிகளும் ஒளிவிடும் திறத்தினால் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளன. ஆனால் அவற்றின் மூலப்பொருள் ஒன்றே என்பதை சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம்.
- ❖ ஓர் அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன் எனக் கம்பரின் வரிகளிலிருந்து அணுச்சேர்ப்பு, அணுப்பிரிப்பு பற்றிய கருத்துக்களை அறிகிறோம்.
- ❖ மருந்தாகித் தப்பா மரத்தற்றால் என்னும் திருக்குறள் வரிகளிலிருந்து, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை அறிகிறோம்

- ❖ பதினெண்சித்தர்களால் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.
- ❖ புல்லாகிப் பூடாய் என்ற திருவாசக அறிவிலிருந்து பல்வகை உயிர்களினட பரிணாம வளர்ச்சி அறிவு பற்றி அறிகிறோம்
- ❖ மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும் என்ற திருவாசக வரிகளிலிருந்து கருவியல் அறிவு பற்றி அறிகிறோம்.

2. **<u>தமிழர் இசைக்கலை குறித்துத் தொகுத்தெழுதுக.</u>**

**<u>தமிழர் இசைக்கலை : -</u>**

- ❖ பண்கள், இசைக்கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசை பற்றிய ஏராளமான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன.
- ❖ தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
- ❖ நரம்பின் மறை என தொல் காப்பியர் உரைப்பதன் மூலம் இசை இலக்கணநூல் உண்டென உணரமுடிகிறது.
- ❖ பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடகக் கலைஞர்கள் இருந்தனர்
- ❖ தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்புவரை தாலாட்டு, ஒப்பாரி ஆகியவற்றால் இசை முதன்மை பெறுகிறது.
- ❖ தமிழர், ஐவகை நிலத்திற்கும் ஐந்திணைக்கும் ஏற்ற பண்ணிசை வகுத்தனர்
- ❖ தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி எனப் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர்
- ❖ குழல், யாழ் போன்ற இசைக்கருவிகளை பயன்படுத்தியதை திருக்குறள் மூலம் அறிகிறோம்.

3. **<u>காந்தியடிகள் பின்பற்றிய கொள்ளைகளைத் தொகுத்து எழுதுக.</u>**

**<u>காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகள்: -</u>**

- ❖ அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை ஆகிய உயர் பண்புகள் அவருக்கு இளம்பருவத்திலேயே இயல்பாய் அமைந்தன.
- ❖ அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த் காந்தி தாமும் சத்தியவானாய் இருக்க வேண்டும் என்று உறுதிகொண்டார்.
- ❖ அறவழியில் உரிமைப் போராட்டம் நடத்தினார்
- ❖ உண்மை பேசுதல், பகைவனிடம் அன்பு பாராட்டுதல், நோக்கமும் அவற்றை அடையும் வழிகளும் தூய்மையானவையாய் பிறருக்குத் துன்பம் தாராதனவாய் இருத்தல், எளிமையாய் இருத்தல் ஆகியவற்றை அறநெறிகளாய்ப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்.
- ❖ என்னைப் பொறுத்தவை தேசாபிமானமும் மனிதாபிமானம் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாய் இருப்பதும், அதற்குமேல் மனிதாபிமானியாய் இருப்பதும்தான் என்று காந்தியடிகள் கூறினார்.
- ❖ கிராமங்களின் வாழ்வு அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கைகளில் தான் உள்ளது என காந்தியடிகள் கூறினார்.
- ❖ கொள்கை இல்லாத அரசியல், உழைப்பில்லா ஊதியம், நாணயம் இல்லாத இன்பம், மனித நேயம் இல்லாத அறிவியல், நியாயமில்லாத வழிபாடு ஆகியவற்றால் பயனில்லை என்று காந்தியடிகள் கூறினார்.
- ❖ இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி வாழ்கின்றனர். அந்நிலையில் மன்னர்களும் செல்வர்களும் விலை மதிப்புள்ள அணிகலன்களை அணிந்து கொண்டு பகட்டாக வாழ்வது பாவம் என்று காந்தியடிகள் கூறினார்.

4. **<u>வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப்பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக?</u>**

**<u>வள்ளலார் அருளிய பாடல்கள் : -</u>**

- ❖ சென்னை கந்தக்கோட்டம் இறைவனைப் பாடியது தெய்வ மணிமாலை.

- சென்னை திருவொற்றியூர் சிவபெருமானைப் பாடியது எழுத்தறிவும் பெருமான் மாலை.
- அருட்கருணை நிறைந்த ஆறு தொகுதிகளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பு திருவருட்பா.
- பொதுமை உணர்வுடன் பிற தெய்வங்களின் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார்.

**வள்ளலாரின் தமிழ்ப்பற்று : -**

- வள்ளலார் தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்றார்.
- பயில்வதற்கும் அறிதற்கும் எளிமையான மொழி தமிழ் என்றார்.
- பாடுதற்கும் துதித்தற்கும் இனிமையான மொழி தமிழ் என்றார்
- கல்வியை எளிமையாய் கொடுப்பது தமிழ் மொழி என்றார்.

* * * * *

(வினா வரைவுத் திட்டப்படி)

2012 - 2013

**தமிழ் இரண்டாம் தாள் II**

**பிரிவு - I**

**(மதிப்பெண்கள் : 20)**

**பகுதி - I**

**I. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக: -**

1. இளவழகன் வந்தான். இது **வெளிப்படை** தொடர்.
2. 'மாடு' என்னும் சொல் **அஃறிணைப் பொதுப்பெயர்.**
3. மாடு கன்றை ஈன்றது இத்தொடரில் மாடு என்பது **பசு** குறிக்கும்.
4. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது **நிலைமொழி ஈறும் மெய்யும்** நீங்கும்.
5. மேற்கு + நாடு என்பது **மேனாடு** எனச் சேரும்.
6. கருமை + குழி என்பது **ஈறுபோதல், இனமிகல்** எனும் விதிகளின்படி புணர்ந்தது.
7. பொருளிலக்கணம் **இரண்டு** வகைப்படும்.
8. அகத்தினைகள் **ஏழு** வகைப்படும்.
9. மார்கழி, தை ஆகிய இரண்டும் **முன்பனி** காலத்திற்குரியது.
10. மருத நிலத்திற்குரிய தெய்வம் **இந்திரன்**
11. பாலை நிலத்திற்குரிய பறவைகள் **புறா, பருந்து.**
12. புறத்திணைகள் **பன்னிரண்டு** வகைப்படும்.
13. நிரைகவர்தல் என்பது **வெட்சி.**
14. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது **வஞ்சித்திணை**
15. பாடாண்திணை என்பது **ஆண்மகனின் ஒழுகலாறுகள்** கூறுவது.
16. ஒருதலைக் காமம் என்பது **கைக்கிளை**
17. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது **நொச்சி** ஆகும்
18. உலகு என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியினட ஈற்றுச்சீராயின் அதன் வாய்பாடு **பிறப்பு** ஆகும்
19. 'நல்லவை' - இச்சொல்லை அலகிட்டால் **நேர்நிரை** எனப்பிரியும்.
20. நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி **முச்சீராய்** வரும்.
21. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் **ஏகாரத்தில்** முடிவது சிறப்பு.

**கோடிட்ட இடத்தை நிரப்புக : -**

**பகுதி - II**

**(மதிப்பெண்கள் : 20)**

1. வளையல் - இச்சொல்லின் ஐகாரம் **ஒரு மாத்திரை** குறைந்து ஒலிக்கிறது.
2. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் **திண்ணை** ஆகும்.
3. பல் + தீது என்பது **பஃறீது.**
4. குறுக்கங்கள் ஐகாரக் குறுக்கும், ஔகாரக் குறுக்கம் **மகரக் குறுக்கம்.**
5. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரை செயப்பாட்டு விளையாக மாற்றும் போது, பொம்மை **பூங்குழலியால்**, செய்யப் பட்டது என வரும்.
6. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில் ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் அது **தனிநிலைத் தொடர்.**
7. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது அன்பரசன் திருக்குறளை **கற்பித்தான்** என வரும்.
8. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது **தனிமொழி.**
9. தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்.**
10. வினைமுற்று **முற்று, எச்சம்** என இருவகைப்படும்.

11. ஓர் எச்சவினை **<u>பெயரை</u>** கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.
12. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே **<u>ஒரு பொருட்பன்மொழி</u>** என்பர்
13. ஒரு பொருட்பன்மொழிக்கு சான்று **<u>உயர்ந்தோங்கி அல்லது குழிந்தாழ்ந்து</u>.**
14. இது செய்வாயா? என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது **<u>உறுவது கூறல்</u>** விடை ஆகும்.
15. ஆடத் தெரியுமா? என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது **<u>இனமொழி</u>** விடை ஆகும்.
16. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது **<u>கொளல்</u>** வினா ஆகும்.
17. அடி அகரம் ஐஆதல் என்பது **<u>பைங்கூழ்</u>**
18. ஆதிநீடல் என்பதற்குச் சான்று **<u>மூதூர்</u>**
19. இனமிசல் என்பது **<u>கரும்பலகை</u>** ஆகும்.
20. தன்னொற்றிரட்டல் என்பது **<u>வெற்றிலை</u>** ஆகும்.
21. அகம், புறம் ஆகிய இரண்டும் **<u>பொருள்</u>** இலக்கணம் ஆகும்.
22. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் **<u>அகத்திணைகள்</u>** எனப்படும்.
23. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி **<u>கடலும், கடல் சார்ந்த பகுதியாகும்</u>.**
24. யாமம் என்பது இரவு பத்து மணி முதல் காலை **<u>2 மணி</u>** வரை
25. மருதம் நெய்தல் ஆகிய இரண்டிற்கும் **<u>ஆறு</u>** பெரும் பொழுதுகளும் வரும்.
26. **<u>திருமால்</u>** முல்லை நிலத்திற்குரிய தெய்வம்
27. மணமுழா, நெல்லரிசினை ஆகிய இரண்டும் **<u>மருதத்</u>** திணைக்குரிய பறைகள்.
28. நெய்தல் திணைக்குரிய தொழில் **<u>மீன்பிடித்தல்</u>** ஆகும்.
29. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று **<u>ஒரு</u>** விகற்பத்தானும் **<u>இரு</u>** விகற்பத்தானும் வரும்.
30. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றால் பல விகற்பத்தான் வருவது **<u>இன்னிசை வெண்பா</u>** ஆகும்
31. வெண்பாவின் ஓசை **<u>செப்பலோசை</u>** ஆகும்.
32. ஆசிரியப்பாவின் வேறு பெயர் **<u>அகவற்பா</u>** ஆகும்.
33. ஆசிரியப்பாவின் ஓசை **<u>அகவலோசை</u>** ஆகும்.

**<u>இலக்கணக்குறிப்பு : -</u>**

34. விடேன் - தன்மை ஒருமை வினைமுற்று
35. சொலல் - தொழில் பெயர்
36. எய்தாப்பழி - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
37. கலங்காது - எதிர்மறை வினையெச்சம்
38. தக்கார், செற்றார் - வினையாலணையும் பெயர்
39. தார்வேந்தன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை
40. இவை, இவை - அடுக்குத் தொடர்

**<u>பிரித்து எழுதுக : -</u>**

41. ஓரிரவு - ஓர் + இரவு
42. பணிந்திவர் - பணிந்து + இவர்
43. திண்டிறல் - திண்மை + திறல்
44. எந்நாளும் - எ + நாளும்
45 .பாவிசை - பா + விசை
46. நான்மறை - நான்கு + மறை
47. அருவினை - அருமை + வினை
48. ஊரறியும் - ஊர் + அறியும்
49. என்னறு - என் + அறு
50. வழியொழுகி - வழி + ஒழுகி

## பகுதி III

### சுருக்கமாக விடையளிக்க

### (ஒரு மதிப்பெண் வினா) : -

**வல்லினம் மிகும் இடங்கள் :**

1. நிலைமொழி உயிரீற்றும் சொல்லின் பின் வல்லினம் (க்,ச்,த்,ப்) மிகும்.
2. அ,இ,உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும் எ என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்.
   அ + கடை = அக்கடை                எ + பாடம் = எப்பாடம்
3. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.
   எப்படி + சொன்னான் = எப்படிச் சொன்னான்.
4. நான்காம் வேற்றுமை (கு) விரியில் வரும் வல்லினம் மிகும்.
   எனக்கு + கொடு = எனக்குக் கொடு
5. ஓரெழுத்து ஒருமொழியில் வரும் க்,ச்,த்,ப், மிகும்.
   தீ + சட்டி = தீச்சட்டி
6. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகும்.
   கேளா + செவி = கேளாச் செவி

**வல்லினம் மிகா இடங்கள் : -**

1. வினைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது.
   விரி + சுடர் = விரிசுடர்
2. உம்மைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது.
   தாய் + தந்தை = தாய்தந்தை
3. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.
   வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்
4. இரட்டைக் கிளவியில் வல்லினம் மிகாது
   படபட
5. எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது.
   பூவிழி + தந்தாள் = பூவிழி தந்தாள்.

**உருவகத்தை உவமையாக மாற்றுக.**

| | | |
|---|---|---|
| மொழியமுது | : | அமுதமொழி |
| கண்கயல் | : | கயற்கண் |
| தமிழ்த்தேன் | : | தேன்தமிழ் |
| விரல்பூ | : | பூவிரல் |
| முகம்மதி | : | மதிமுகமம் |

**உவமையை உருவகமாக மாற்றுக.**

| | | |
|---|---|---|
| மலரடி | : | அடிமலர் |
| முத்துப்பல் | : | பல்முத்து |
| விற்புருவம் | : | புருவவில் |
| மலர்ப்பாதம் | : | பாதமலர் |

**தொடரை மாற்றியமைத்தல்.**

**வினா வாக்கியங்களாக மாற்றுக : -**

1. சங்க காலத்தில் பெண்கல்வி சிறப்புற்றிருந்தது
   **சங்க காலத்தில் பெண்கல்வி சிறப்புற்றிருந்ததா?**

2. உழைப்போர் உயர்வர்.
**உழைப்போர் உயர்வரா?**
3. சேயை விரும்பாத தாயில்லை
**சேயை விரும்பாத தாயுண்டோ?**
4. தமிழின் இனிமையை எவரும் மறுக்க மாட்டார்.
**தமிழின் இனிமையை எவரும் மறப்பரா?**
5. கடும் உழைப்பும் ஊக்கமும் இருந்தால் அனைவரும். வாழ்வில் உயரலாம்
**கடும் உழைப்பும் ஊக்கமும் இருந்தால் அனைவரும் வாழ்வில் உயர்வாரா?**

**செய்தி வாக்கியமாக மாற்றுக: -**

1. என்னே! அறிஞர் அண்ணாவின் பொதுநலத் தொண்டு!
**அறிஞர் அண்ணாவின் பொதுநலத் தொண்டு சிறப்பானது.**
2. உழைப்பு இல்லாதவர்க்கு உயர்வு உண்டோ?
**உழைப்பு இல்லாதவர்க்கு உயர்வு இல்லை.**
3. அந்தோ! தமிழகக் கடைத்தெருக்களில் அறிவிப்புக் கூடத் தமிழில் இல்லையே!
**தமிழகக் கடைத் தெருக்களில் அறிவிப்புக்கூட தமிழில் இல்லை**
4. அனுமன் இலங்கையில் சீதையைக் கண்டானா?
**அனுமன் இலங்கையில் சீதையைக் கண்டான்.**
5. ஆ! பொற்கோயில் எத்தனை அழகாக உள்ளது?
**பொற்கோயில் அழகாக உள்ளது.**

**உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக: -**

1. மல்லிகை மிகவும் மணமுடையது
**ஆகா! மல்லிகையின் மணமே மனம்!**
2. திரு.வி.க.தமிழ்நடை மிகவும் இனிமையானது.
**ஆகா! திரு.வி.க.வின் தமிழ்நடை என்னே இனிமையானது!**
3. கஜீராஹோ சிற்பங்கள் மிகவும் அழகானது.
**என்னே! கஜீராஹோ சிற்பங்களின் அழகோ அழகு!**
4. ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம் உலகை உலுக்கியது
**ஐயகோ! ஜப்பான் பூகம்பம் உலகை உலுக்கியது.**
5. பாரதியாரின் பாட்டுத்திறன் மிகவும் நன்று
**என்னே! பாரதியின் பாட்டுத்திறத்தின் இனிமை!.**

**கட்டளை வாக்கியங்களாக மாற்றுக: -**

1. அறம் செய்ய வேண்டும்
**அறம் செய்.**
2. இளமையில் கற்க வேண்டும்.
**இளமையில் கல்.**
3. பெற்றோரையும், பெரியோரையும் பேண வேண்டும்
**பெற்றோரையும், பெரியோரையும் பேண்.**
4. காலையில் எழுவதைப் பழக்கமாகக் கொள்ள வேண்டும்
**காலையில் எழுவதைப் பழக்கமாகக் கொள்.**
5. மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றிக் கட்டுரை வரைவாயா?
**மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றிக் கட்டுரை வரை.**

**ஒருமை, பன்மை பிழை நீக்கி எழுதுக: -**

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தான்
**கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர்.**
2. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
**பெண்கள் பெற வேண்டியன பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.**

3. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
**இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தன.**
4. வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.
**வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தன.**
5. புலவர் பொங்கற் புதுநாள்களின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.
**புலவர் பொங்கற் புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.**
6. மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது.
**மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றன.**

<u>சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக: -</u>

1. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.
**ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமாம்.**
2. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
**கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.**
3. திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
**திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.**
4. கைதொழில் ஒன்றை கற்று கொள்.
**கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்.**
5. பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.
**பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்துச் செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.**

<u>பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எழுதுக: -</u>

1. ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
**திருத்தலங்கள் சென்று திருவுருவங்களை வழிபடுக.**
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
**இவ்வழியாக பயணம் செல்லுங்கள்.**
3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
**இந்த மேல் சட்டை மிகவும் விலை உயர்ந்தது**
4. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
**நாளை நடக்கவிருக்கும் போட்டியில் இந்தியா கண்டிப்பாக வெற்றிபெறும்.**
5. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்
**நான் இந்தக் கல்லூரியின் பழைய மாணவன்.**

<u>மேலும் சில சொற்கள் : -</u>

| | | |
|---|---|---|
| இலாபம் | - | வருவாய் |
| விஞ்ஞானி | - | அறிவியலாளர் |
| உண்ணாவிரதம் | - | உண்ணா நோன்பு |
| நிபுணர் | - | வல்லுநர் |
| அலங்காரம் | - | ஒப்பனை |

<u>தொகைச் சொல்லை விரித்தெழுதுக:-</u>

| | | |
|---|---|---|
| இருவினை | : | நல்வினை, தீவினை, (தன்வினை பிறவினை) |
| இருதிணை | : | உயர்திணை, அ∴றிணை, அகத்திணை, புறத்திணை |
| முத்தமிழ் | : | இயல், இசை, நாடகம் |
| முக்கனி | : | மா, பலா, வாழை |
| முப்பால் | : | அறம், பொருள், இன்பம் |

| | | |
|---|---|---|
| மூவேந்தர் | : | சேரன், சோழன், பாண்டியன் |
| மூவிடம் | : | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| நாற்றிசை | : | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| நானிலம் | : | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பால் | : | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| ஐம்புலன் | : | சுவை, ஒளி, ஊறு, ஓகை நாற்றம் |
| ஐம்பொறி | : | மெய், வாய், கண், மூக்கு செவி |

<u>**நிறுத்தற்குறியிட்டு எழுதுக: -**</u>

1. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்
   **சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.**
2. கதைப் படங்கள் மட்டுமின்றிக் கருத்துப் படங்கள் செய்திப் படங்கள் விளக்கப் படங்கள் கல்விப் படங்கள் எனப்பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது
   **கதைப் படங்கள் மட்டுமின்றிக் கருத்துப் படங்கள், செய்திப் படங்கள, விளக்கப் படங்கள், கல்விப் படங்கள் எனப்பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.**
3. தொலைக்காட்சி குளிருட்டும் கருவி கைப்பேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.
   **தொலைக்காட்சி, குளிருட்டும் கருவி, கைப்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.**

<u>**உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக: -**</u>

1. பசுமரத்தாணி போல
   என் இளமைக் காலத்துச் செயல்கள் <u>**பசுமரத்தாணி போல**</u> என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளன.
2. குன்றின் மேலிட்ட விளக்கு போல
   அறிஞர் அண்ணாவின் புகழ், <u>**குன்றின்மேல் இட்ட விளக்கு போல**</u> பாரெங்கும் ஒளிவீசுகின்றது.
3. அடியற்ற மரம் போல
   கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டதும், கண்ணகி <u>**அடியற்ற மரம் போலத்**</u> தரையில் விழுந்தாள்.
4. அத்தி பூத்தாற் போல
   வெளிநாட்டில் குடியேறி விட்டவர்கள் <u>**அத்திபூத்தாற்போல**</u> எப்பொழுதாவது இந்தியாவுக்கு வருவார்கள்.
5. உள்ளங்கை நெல்லிக்கனி போல
   <u>**உள்ளங்கை நெல்லிக்கனி போல**</u> தெளிவான உண்மையாகும்.

<u>**மரபுத் தொடருக்கேற்ற பொருளை எழுதுக: -**</u>

1. ஆயிரங் காலத்துப் பயிர் - நீண்ட கலைத்தற்குரியது.
2. ஏட்டுச் சாரெக்காய் கறிக்குதவாது - பட்டறிவில்லாத படிப்பறிவு
3. முதலைக் கண்ணீர் - பொய்யழுகை
4. ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று
5. கம்பி நீட்டல் - சொல்லிக் கொள்ளாமல் செல்லல்
6. பஞ்சாய்ப் பறத்தல் - அலைந்து திரிதல்
7. கொட்டிபார்த்தல் - மிகுதியாகப் பேசுதல்.

## <u>இலக்கணம்</u>

### <u>குறுவினா: - (2 மதிப்பெண்)</u>

1. **இகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக -**
   1. **இகாரக்குறுக்கம் :** மொழி முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் 'ஐகாரம்' தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும்.
   2. **எடுத்துக்காட்டு :**

ஐம்பது – சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது
தலைவர் - சொல்லுக்கு இடையில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது.
கடலை – சொல்லுக்கு ஈற்றில் வந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது.

2. **ஔகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக : -**
   1. **ஔகாரக்குறுக்கம் :** சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் தனது இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிப்பது ஔகாரக்குறுக்கம் எனப்படும்.
   2. **எடுத்துக்காட்டு :** ஔவை, வௌவால் - ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது. மொழிக்கு (சொல்லுக்கு) இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.
3. **மகரம் எவ்வெவ்விடங்களில் குறுகும் ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.**
   1. **மகரம்க்குறுக்கம் :** ம் என்னும் மெய்யெழுத்து, தன் அரைமாத்திரை அளவிலிருந்து, கால் மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிப்பது மகரக்குறுக்கம் எனப்படும்.

   **எடுத்துக்காட்டு** : வரும் + வண்டி = வரும் வண்டி.
4. **சொல் என்றால் என்ன? சொல்லின் வகைகள் யாவை?**

   சொல் : - ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்.

   வகைகள் : தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி என மூவகைப்படும்.
5. **பொது மொழி என்றால் என்ன? சான்றுகாட்டி விளக்குக.**

   ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அசசொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்து நின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, பொது மொழி.

   எடுத்துக்காட்டு : அந்தமான்.

   அந்தமான் - தீவு : அந்த + மான் - அந்த மான் (விலங்கு)
6. **தெரிநிலைவனைமுற்றைச் சான்றுகாட்டி விளக்குக: -**
   1. **தெரிநிலைவினைமுற்று :** செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலைவினைமுற்றாகும்.

   **எடுத்துக்காட்டு :** உழுதான்

   | | | |
   |---|---|---|
   | செய்பவன் | - | உழவன் |
   | கருவி | - | கலப்பை |
   | நிலம் | - | வயல் |
   | செயல் | - | உழுதல் |
   | காலம் | - | உழுதான் |
   | செய்பொருள் | - | நெல் |
7. **குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன?**
   1. குறிப்புப் பெயரெச்சம் : காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்சொல்லைக் கொண்டு முடியும் எச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

   எடுத்துக்காட்டு : நல்ல பையன்

   இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது.
8. **குறிப்புவினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.**
   1. குறிப்புவினையெச்சம் : காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பின் அடிப்படையில் பொருளை உணர்த்தி நின்று, வினைமுற்றைக் கொண்டு முடிவது குறிப்புவினையெச்சம் எனப்படும்.

   எடுத்துக்காட்டு : மெல்லப் பேசினான், கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்.
9. **வெளிப்படை என்றால் என்ன ? சான்று தருக.**
   1. **வெளிப்படை** : வெளிப்படையாகத் தன்பொருளை உணர்த்தும் சொல் வெளிப்படை

எனப்படும்.

**2. எடுத்துக்காட்டு** : உலகிலேயே பண்பாட்டில் தமிழ்நாடுதான் தலைசிறந்து விளங்குகின்றது.

**10. குறிப்பு என்பதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

1. குறிப்பு ஒரு தொடர் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது குறிப்பு எனப்படும்.

எடுத்துக்காட்டு : பூப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது.

**11. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**இனங்குறித்தல்** : ஒரு சொல், தன்பொருளையும் குறித்துக் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்

**எடுத்துக்காட்டு** : கதிர்வேல் வெற்றிலை தின்றான் இங்கு கதிர்வேல் வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு முதலியவற்றையும் சேர்த்து தின்றான் எனப் பொருள்படுகிறது

**12. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக?**

**1. அடுக்குத் தொடர்** : அசைநிலை, விரைவு, சினம், மகிழ்ச்சி,அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும்.

2. எடுத்துக்காட்டுக:

1. அன்றே அன்றே - அசைநிலை
2. போ போ - விரைவு
3. எறி எறி - சினம்
4. வருக வருக - மகிழ்ச்சி
5. தீ தீ தீ - அச்சம்
6. நொந்தேன் நொந்தேன் - துன்பம்
7. கோடி கோடி கோடி கோடியே - இசை நிறை

**13. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| **அடுக்குத் தொடர்** | **இரட்டைக்கிளவி** |
|---|---|
| 1. சொற்கள் தனித்தனியே நிற்கும் | சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும் |
| 2. பிரித்தால் பொருள் தரும் | பிரித்தால் பொருள் தராது |
| 3. இரண்டு, மூன்று, நான்கு, முறை அடுக்கி வரும் | இரண்டு முறை மட்டுமே அடுக்கி வரும் |
| 4. விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி முதலிய பொருள்கள் பற்றி வரும் | அசை நிலையாகவே வரும். |

**14. வினா, விடைவகைள், ஒரு பொருட் பன்மொழி**

**1. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை? (அல்லது) அறுவகை வினாக்கள் யாவை?**

1. வினா அறுவகைப்படும்
2. அவை: அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பன.

**15. வடக்கு என்னும் திசைப்பெயருடன் பிற திசைகள் சேரின் எவ்வாறு புணரும்?**

1. வடக்கு + கிழக்கு - வடகிழக்கு
   வடக்கு + மேற்கு - வடமேற்கு
2. வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க்,கு நீங்கிப் புணர்ந்தது.

**16. தெற்கு என்னும் திசைப்பெயருடன் பிற பெயர்கள் சேரின் எவ்வாறு புணரும்?**

1. தெற்கு + திசை - தென்திசை
2. இதில் நிலைதொழியினட இறுதியாகிய கு நீங்கியது : அதன் அயல் எழுத்தான் ற் - ன் ஆக

மாறிப் புணர்ந்தது.

17. **செம்மை + மொழி எவ்வாறு புணரும்?**
    1. செம்மை + மொழி = செம் + மொழி = செம்மொழி
    2. ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று 'மை' கெட்டுக் செம்+மொழி – செம்மொழி என்று புணர்ந்தது.
18. **வெற்றிலை – புணர்ச்சிவிதி கூறுக.**
    1. வெற்றிலை – வெறுமை + இலை = வெறு + இலை = வெற்+இறை = வெற்ற் + இலை – வெற்றிலை
    2. வெறு + இலை – ஈறு போதல்
       வெற் + இலை – முற்றும் அற்று ஓரோவழி
       வெற்ற் + இலை – தன் ஒற்று இரட்டல்
       வெற்(ற்+இ) – உடல்மேல் உயரிவந்து ஒன்றுவது இயல்பே 'வெற்றிலை'
19. **முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.**
    முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள்
    1. தெய்வம் : திருமால்
    2. விலங்கு : முயல்
    3. பறவை : மயில்
    4. தொழில் : ஏறுதழுவுதல்.
20. **புறத்திணைகள் நான்கனை எழுதுக.**
    **புறத்திணைகள் :**
    1. வெட்சித் திணை
    2. கரந்தைத் திணை
    3. வஞ்சித் திணை
    4. காஞ்சித் திணை
21. **பகுபத உறுப்பிலக்கணம் (பகுதி, விகாரம், சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி)**

வாழ்க - வாழ் + க
பகுதி வியங்கோள் வினைமுற்று விகுதி

போற்றி - போற்று + இ
பகுதி வினையெச்ச விகுதி

எழுந்து - எழு + த்(ந்) + த் + உ
பகுதி சந்தி ந்ஆனது விகாரம் த் - இ.இ, உ வினையெச்ச விகுதி

வருக - வா(வரு) + க
பகுதி வரு எனக் குறுகியது விகாரம் க வியங்கோள் வினைமுற்று விகுதி

கண்டது - காண் (கண்) + ட் + அ + து
பகுதி கண் எனக்குறுகியது விகாரம் ட் இ.இ., அ சாரியை து ஒருமை பன்மை வினைமுற்று விகுதி

புரிந்த - புரி + த்(ந்) + த் + அ
பகுதி சந்தி ந்ஆனது விகாரம் த் - இ.இ, அ பெயரெச்ச விகுதி.

கேட்ட - கேள் (ட்) + ட் + அ
பகுதி ட் விகாரம் ட் இ.இ., அ பெயரெச்ச விகுதி

சூழ்வார் - சூழ் + வ் + ஆர்
பகுதி வ் எதிர்கால இடைநிலை ஆர் பலர் பால் வினைமுற்று விகுதி

அறியாமை - அறி + ய் + ஆ + மை
பகுதி ய் உடன்படு மெய், ஆ எதிர்மறை இடைநிலை மை தொழில் பெயர்

பெற்றேன் - பெறு (பெற்று) + ஏன்
பகுதி பெற்று ஒற்று இரட்டித்தது, ஏன் தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

## <u>இலக்கண பெருவினா (ஐந்து மதிப்பெண்)</u>

**1. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?**

| | | |
|---|---|---|
| ஓசை | : | செப்பலோசை பெற்று வரும் |
| சீர் | : | இயற்சீரும் வெண்சீரும் பயின்று வரும் |
| தளை | : | இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பயின்று வரும் |
| அடி | : | இறுதியடி மூன்று சீராகவும் பிற அடிகள் நான்கு சீராகவும் வரும் |
| வரையறை | : | இரண்டடி முதல் பன்னிரெண்டு அடிகள் வரை பாடப்படும் |
| வாய்ப்பாடு | : | இறுதியடியின் இறுதிச்சீர் நான், மலர் காசு பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றைப் பெற்று முடியும் |
| விகற்பம் | : | ஒரு விகற்பமாகவும் பல விகற்பமாகவும் வரும். |

**<u>2. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?</u>**

| | | |
|---|---|---|
| ஓசை | : | அகவலோசை பெற்று வரும் |
| சீர் | : | இயற்சீர் பயின்று வரும் |
| தளை | : | ஆசிரியத் தளைபயின்று வரும் பிற தளையும் வரும் |
| அடி | : | அடிதோறும் நான்கு சீர் பெற்று வரும் |
| வரையறை | : | மூன்றடி முதல் பாடுவோர் விருப்பம் வரை அமையும் |
| முடிவு | : | இறுதியடியின் இறுதிச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பாகும். |

**3. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
பகவன் முதற்றே உலகு
- இதில் பயின்று வரும்

பாவகையை சுட்டி விளக்குக.

பாவகை : - குறள் வெண்பா.

குறள் வெண்பாவின் இலக்கணம் (குறிப்பு : வெண்பாவின் பொது இலக்கணத்தை இங்கு சேர்த்தல் வேண்டும்)

- வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று வரும்
- இரண்டு அடிகளால் பாடப்படும்
- இக்குறட்பா ஒருவிகற்பத்தான் வந்த குறள் வெண்பாவாகும்

சான்று - அ<u>க</u>ர
ப<u>க</u>வன்

### அணி இலக்கணம்

**1. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக:-**

**தற்குறிப்பேற்ற அணி:** - இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.